MAY 2025 **P/ID 35315/PTL1E**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. திருவள்ளுவரின் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

2. திருவள்ளுவமாலை – குறிப்பு வரைக.

3. "குறுகத் தறித்த குறள்" குறித்து இடைக்காடர் கூறியது யாது?

4. துறவறவியல் என்றால் என்ன?

5. திருக்குறளின் தொடக்கம் குறித்து எழுதுக.

6. ஆகூழால், போகூழால் விளக்கம் தருக.

7. "திருவள்ளுவர் குறிப்பிடும்" அரசியல் எது?

8. "அரசருள் ஏறு"– யார்?

9. "அருவினையும் மாண்டது அமைச்சு"– விளக்கம் தருக.

10. ஒழிபியல் என்றால் என்ன?

11. கற்பு–பெயர்க்காரணம் கூறுக.

12. அலர் பொருள் தருக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடை தருக.

13. திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்தியம்புக.

14. திருவள்ளுவமாலையின் சிறப்பினை எழுதுக.

15. இல்வாழ்க்கையின் சிறப்பு இயல்புகளை வள்ளுவரின் வழிநின்று விளம்புக.

16. கல்வி என்னும் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. அமைச்சனுக்கு உரிய இலக்கணங்களைப் பட்டியலிடுக.

18. பெண்மைக்கு உரிய அணிகலன்களாக வள்ளுவர் குறிப்பிடுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

19. வள்ளுவர் கூறும் பிரிவு ஆற்றாமை குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடை எழுதுக.

20. திருக்குறளின் பன்முகத் தன்மையை ஆய்க.

21. அன்புடைமையின் சிறப்புகளை விளக்குக.

22. அறிவுடைமை குறித்த வள்ளுவரின் சிந்தனைகளைப் பகர்க.

23. நட்பின் இலக்கணமாகத் திருக்குறள் கூறுவனவற்றை எடுத்துரைக்க.

24. குறிப்பறிதல் என்றால் என்ன? குறள் வழி விளக்குக.

———————